**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.251** **நாள் : 03.09.2025**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, இன்று (03.09.2025) சென்னை மாவட்டத்தில் தேர்தல் பணிக்காக பெங்களூரு பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற வாக்குப்பதிவிற்கான 2000 கட்டுப்பாட்டுக் கருவிகள் (Control Unit) மற்றும் 2120 வாக்காளர் சரிபார்ப்பு தாள் அச்சிடும் இயந்திரங்கள் (VVPAT) ஆகியவற்றை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் சிந்தாதரிப்பேட்டையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு கிடங்கில் பாதுகாப்பாக வைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.ஜி.சரவணமூர்த்தி மற்றும் அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு** : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.